CC.No.329/2019 (JM.No.II, DHARMAPURI)

25.09.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 6 : திரு.பாலகிருஷ்ணன் (காவல் உதவி ஆய்வாளர் – ஓய்வு)**

**முதல் விசாரணை**

நான் இண்டுர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 20.10.2018 ம் தேதி மாலை 16.45 மணிக்கு இண்டுர் காவல் நிலையத்தில் பணி பொறுப்பில் இருந்த போது நிதிஷ், வயது 18 த/பெ. முருகன், தாசம்பட்டி ரோடு, அண்ணா நகர் கிராமம், பருவதனஅள்ளி அஞ்சல், பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று இண்டுர் காவல் நிலைய குற்ற எண். 123/2018 , சட்டபிரிவு 279,337 IPC ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவற்றை குற்றவியல் நடுவர் எண்.2 நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும், புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடமான 20.10.2018 மாலை 17.30 மணிக்கு சம்பவயிடமான பென்னாகரம் – தருமபுரி மெயின் ரோடு அதகபாடி இ.பி ஆபிஸ் அருகே சென்று சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றேன். அதன்பிறகு காயம்பட்ட முருகன் த/பெ. துரைசாமி என்பவர் 20.10.2018ம் தேதி மாலை 17.05 மணிக்கு இறந்துவிட்டதாக அன்றிரவு 20.00 மணிக்கு கிடைத்த தகவலின் பேரில் சட்ட பிரிவு 279, 337 IPC லிருந்து 279, 337, 304 ஏ IPC ஆக மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பொறுப்பு இண்டுர் காவல் நிலையம், ஏரியூர் காவல் வட்டம் தருமபுரி அவர்களுக்கு பார்வைக்கு வைத்தேன். இண்டுர் காவல் நிலையம் காவல் ஆய்வாளர் கோப்பை பெற்றுக்கொண்டார். புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டார். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.**6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. புகார்தாரர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று அடிப்பட்ட தனது அம்மா, அப்பாவை பார்த்த போது அவர்கள் மயக்கநிலையில் இருந்ததாகவும், அதன்பின்பு இண்டுர் காவல் நிலையத்திற்கு வந்து 16.45 மணிக்கு புகார் அளித்ததாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். தருமபுரி அரசு மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேட்டில் மாலை 16.50 மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.50 மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்ட்டிருந்த நிலையில் 16.45 மணிக்கு காவல் நிலையம் வந்து புகார் அளிக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. கை தவறுதலாக எழுதியிருக்கலாம். புகார் அளித்த நிதிஷ்க்கு விபத்து எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டு முதலில் தருமபுரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேல் சிகிச்சைக்காக சேலம் விநாயகா மிஷன் என்ற தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் கோப்புகளில் அதைப்பற்றி இல்லாததால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. விபத்து பதிவேட்டின் பின்னால் எதிரி

சேலம் விநாயகா மிஷன் என்ற தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. தருமபுரி அரசு மருத்துவமனையில் அவ்வாறு கூறினர் என்பதால் நான் எழுதியிருந்தேன். அதன்பிறகு விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு எதிரியிடம் நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. சம்பவயிடம் சாட்சிகளாக நேரடி சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் யாரும் புகார் அளிக்கவில்லை. 20.10.2018 ம் தேதி மாலை 16.45 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு 22.10.2018 அன்று தான் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வார விடுமுறை என்பதால் இரண்டு நாள்கள் காலதாமதமாக சமர்பித்தேன். இழப்பீடு பெற வேண்டி புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான முதல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.